# எல்லாம் கலந்து

அடையாளமாய் நிற்க வேண்டி

அனைத்தையும் ஏற்கிறது

தனியாய் நின்றோ

தனித்து நின்றோ

எதையும் பாடும்

இதயம் இல்லை அதற்கு ...

ஒரு கூட்டத்தின் நெருக்கடியில்

நசுங்கி நழுவும் வியர்வையை

ஒரு பேருந்து வாரியெறிந்து

போகும் மழைக்கால சேறை

ஒரு தெரு சண்டையில்

உமிழப்படும் எச்சிலை

பாகுபாடின்றி அசுத்தப்படுத்தப்பட்ட

பாழடைந்த சாக்கடை நீரை

மனித உயிர்களை மென்று

தின்ற மலக்குழியின் ஈரத்தை

இளமை பருவங்களை கரைத்த

கிராமத்து கிணறுகளின் நுரையை

பாலின்றி அழும் ஒரு

குழந்தையின் கடைவாய் கண்ணீரை

உதிரம் உருமாறி சிந்தும்

ஒரு தாயின் முலைப்பாலை

நாளைய விதியை மாற்ற

சிந்தப்படும் இன்றைய குருதியை

எல்லோரின் உதடு பட்டும் தீட்டாகாத

தேநீர் குவளையின் கடைசி துளியை

மானம் பார்க்காமல் அம்மணமாய் கிடந்த

கிழவனை நனைக்கும்  மழைத்துளியை

வஞ்சம் ஏதுமின்றி சிரிக்கும்

கிழவியின் வெற்றிலை சாரலை

மோகம் தீர்ந்து முத்தமிட

வந்த விந்துகளின் பிசுபிசுப்பை

கட்டிலின் ஓரத்தில் நதியாய்

கலக்கும் மௌனம் பேசும் உணர்வுகளை

தொட்டிலி - ன் தூக்கம் கலைத்த

மழலையின் சிறுநீரை

என நிஜங்களை கலந்தே

என் பேனாவுக்கு

மை ஊற்றியிருக்கிறேன்

அது இலக்கியம் பாடாமல்

இலக்கணம் பேசாமல்

உரை எழுதாமல்

காவியம் கிறுக்காமல்

கல்லறை சென்றாலும்

கவலை ஏதுமில்லை

நிஜங்களை உரைக்கும்

சாமானியனுக்காக சத்தமிடும்

ஏழைக்காக சிறை செல்லும்

என்று நம்பியே

என் குருதியையும்

கொஞ்சம் கலக்கிறேன் ...

எவர் காலை சொறிந்தும்

செரிந்த இலக்கியம் என

அது பெயர் வாங்க சம்மதிக்காது !

ஏனெனில் அது

எல்லோருக்குமானதாய்

எல்லாம் கலந்தது ....

## மீட்பன்

அவன் மீட்பன் தான் !
தந்தை யாரென அவன்
தர்க்கம் நடத்தக்கூடும்
நீயா என் தாயென
முகம் மூடக்கூடும்

எங்கே பிறந்தேன் என
அவன் கேட்டால்
அதோ அந்த ஆலயத்தின்
ஆலமர விழுதுகளின் மறைவில்
அழுதபடி பிறந்தாயென சொல்லிவிடுவேன்

எப்படி பிறந்தேன் என
அவன் கேட்கும்படி இந்த
அறிவியல் அவனை முட்டாளாக்காது
ஆனால் யாருக்கு பிறந்தேன் என
அவனை தேட வைக்கும்
அவலத்தை சமூகம் செய்யும்

அவன் மீட்பன்
அவன் என்னை மீட்க வரட்டும்
ஆனால் அவன் கேள்விகளோடு
என்னிடம் வரக்கூடாது

தத்துவங்களோடு என்னை
தீண்டக்கூடாது

ஐயோ !!!
தாய் இவளில்லை என
தள்ளி போனாலும் பரவாயில்லை
விலை மாது தானே என
விருப்பம் கொண்டு வந்துவிடும்
விதி நேர்ந்தால்

அவனுக்கு ஆசை அரும்புவிடும்
வயதில் நான் ஒன்றும்
நாற்பது வயதை தொட்டிருக்கமாட்டேன்
முப்பது வயதென என்
முன்னழகு சாட்சி சொல்லி
வியாபாரம் செய்து கொண்டிருக்கும்

என் முதல் மாத விடாயின்
குருதி துளிகள் காயும் முன்பே
அவன் விந்துவாய் என்னுள்
அலைகிறான் என தெரியாமல்
அந்த முட்புதரில்  இரவில்
அழுது கொண்டிருந்தேன்

வயிற்றுக்குள் பிள்ளை வளர்கிறான் என்ற

தாய்மை இல்லாமல்
விளையாட தம்பி வருகிறான் என
விருப்பம் கொண்டவள் நான்
அவனை பெற்றெடுக்கும் முன்பே
விற்பனையும் செய்துவிட்டேன்

புணர பயந்து வெறும்
தொடுதலுக்கும்  வெட்கமின்றி
முத்தமிடுவதற்கும் தனங்களை
தடவுவதற்கும் என வரும்
விடலைகளின் விருப்பத்திற்கு
ஐம்பது ரூபாயென அவனை பாதுகாத்தேன்

ஏதோ ஒரு பாலத்தின் அடியிலோ
மரங்களின் நிழலிலோ
சாலையின் சந்திப்புகளிலோ
பேருந்து நிலையங்களிலோ உறங்கினால்
அவனுக்கு ஆபத்துயென
கழிவறைகளில் கண் விழித்து கிடந்திருக்கிறேன்

பத்து மாதத்திற்கு
பத்து நாள் இருக்க பிறந்தவனை
பிரசவ வார்டிலிருந்து
எடுத்து வர பணமின்றி
பரிமாறி விட்டு வந்தேன்

பால் சுரக்காத முலைகளையும்

ஆயிரம் ரூபாயை கையில்
திணித்து அவனை தூக்கினார்கள்
எனக்கு புதிதாய் இருந்தது
இதுவரை யாரும் காசை
என் கையில் திணித்ததில்லை
வெகுநேரங்களில் பிறப்புறுப்பில் தான்

இதோ அவன் கொடுத்த காசில்
இந்த கட்டிலும்
இலவம் பஞ்சில் மெத்தையும்
அவன் மீட்பன் தான்
இருந்தாலும் அவன் தான்
முதலீடு போட்டிருக்கிறான்

அவனை தத்தும் தரவில்லை
தாரையும் வார்க்கவில்லை
ஏதோ ஒரு பெரும் முதலாளியின்
பிச்சைக்கார கூட்டத்தில்
பிரதிநிதியாகவே அவன்
பிரிந்து போயிருக்கிறான்

அவன் வரக்கூடும்
பிறப்பின் ரகசியம் கேட்டோ

பிறப்புறுப்பின் சுவை கேட்டோ
தந்தை யாரென கேட்டோ
விந்தை விரயமாக்காவோ
மீட்பன் வருவான்

எப்படி அடையாளம் காண்பது
அவனை ? இன்றிலிருந்தே
கண்ணை மூடி
காம தீயில் வேகும் பொழுதெல்லாம்
கண்ணீரோடு கடவுளை கேட்கிறேன்
கடவுளே !! மீட்பனை இனியொருமுறை
கண்டிப்பாக அனுப்பிவிடாதே ..

- மோகன்குமார் சண்முகம்